RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd2213

# Meera's Oosigal is the Poetic Satire Pointing

## மீராவின் ஊசிகள் கவிதை சுட்டும் அங்கதம்

K. Jelin Suji [a, b, *], D. Mahila Jeni [a, b]

[a] Department of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyur-629802, Kanyakumari, Tamil Nadu, India.
[b] Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli-627012, Tamil Nadu, India.
*Corresponding author Email: jelinsuji6@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijmrd2213
Received: 13-01-2022; Revised: 20-03-2021; Accepted: 21-03-2022; Published: 24-03-2022

**Abstract:** Literature is a mirror of time. Sangam period literature to contemporary literature depicts the love and heroism that occupy an important place in the lives of Tamils. In addition, the traditions of parable, metaphor, imagination, implication, and flesh are dealt with. Thus, innovations that are considered contemporary literature also come out with image, content, and technique. This article is based on Meera's 'Oosigal' poetry, which traces the social ills, the tendency of politicians, and the rich to discriminate between rich and poor. The mockery of society is being created in the world of novel poetry with the expectation that reform will take place. This article makes it clear that the poet Meera's 'Oosigal' explores the social problems of poetry with humor. 'Oosigal' poetry may be situated to skin political, social, religious, and personal insults.

**Keywords:** Kavithaigal, Sangam Period Literature, Religious, Oosigal

**Language:** **Tamil**

## முன்னுரை

இலக்கியம் என்பது ஒரு காலக் கண்ணாடி ஆகும். சங்க கால இலக்கியம் முதல் தற்கால இலக்கியங்கள் வரையிலும் தமிழர்களின் வாழ்வின் முக்கிய இடம் பெறும் காதலையும், வீரத்தையும் எடுத்துரைக்கின்றன. அதோடு உவமை, உருவகம், கற்பனைத்திறன், உள்ளுறை, இறைச்சி ஆகிய மரபுகளும் கையாளப்பட்டுள்ளன. அவ்வகையில் தற்கால இலக்கியமாக கருதப்படும் புதுக்கவிதைகளும் உருவம், உள்ளடக்கம், உத்தி ஆகியவற்றோடு வெளிவருகின்றன. சமுதாய சீர்கேடுகள், அரசியல்வாதிகளின் போக்கு, ஏழை பணக்காரன் பாகுபாட்டை எள்ளி நகையாடும் அங்கதக் கவிதைகளை மீரா 'ஊசிகள்' கவிதையில் கையாண்டுள்ள தன்மையின் அடிப்படையில் இக்கட்டுரையில் அமைந்துள்ளது (Meera, 1974).

## அங்கதம் விளக்கம்

ஆங்கில மொழியில் 'satirical' என்பது தமிழில் அங்கதம் என்று வழங்கப்படும். "ஒருவனுடைய குறையையோ, ஒரு சமூகத்தாரின் குறையையோ அன்னார் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் கூறுதல் அங்கதமாகும். அங்ஙனம் கூறுங்கால் நகைச்சுவை தோன்றக் கூறுதல் இன்புறத்தக்கதென்றாகும்" என்று அங்கதம் என்னும் சொல்லுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

தமிழில் காலத்தால் முற்பட்ட தொல்காப்பியத்திலேயே அங்கதம் குறித்த நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியர் அங்கதம் இரு வகைப்படும் என்று கூறியுள்ளார் (Ilankumaranar, 2018). ஒன்று, செம்பொருள் அங்கதம். இது நேர்பொருள் உடையது. ஒருவரது குற்றங்குறைகளை நேரடியாக பளிச்சென்று சொல்வது மற்றொன்று, பழிகரப்பு அங்கதம். வசையை அதற்கு உரிய சொல்லால்

மறைத்துச் சொல்வது. சொல்லவேண்டிய கருத்தை குறிப்பாகவும், நகைச்சுவையாகவும் கூறும் அங்கத உத்தி புதுக்கவிதை வித்தகர்களால் அதிகமாக கையாளப்பட்டுள்ளது (Eswaran, 2007).

## மீராவின் 'ஊசிகள்' கவிதையில் அங்கத உத்தி

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் ஒருவரான மீராவின் கவிதைகளில் அங்கதம் பயின்று வருவதைக் காண முடிகிறது. இவர் தம் ஊசிகள் கவிதை அங்கதக் கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. குத்தலாக எழுதப்பட்டிருக்கிற இந்தக் கவிதைகளுக்கு 'ஊசிகள்' என்ற பெயர் நயமாகத்தான் படுகிறது' என்று கவிக்கோ அப்துல் ரகுமான் குறிப்பிடுகிறார் (Meera, 1974). "என்னைப் பொறுத்தவரை இலக்கிய உப்பரிகையில் உலாவுவதை விடச்சமுதாய நடை பாதைகளைச் செப்பனிடுவதையே முக்கியமாகக் கருதுகிறேன் என ஒப்புதல் வாக்குமூலம் தருகிறார் (Meera, 1974). கவிஞர் மீரா. நயமான நகைச்சுவை உணர்வு வெளிப்படும் வண்ணம் அவர் சிறந்த அங்கதக் கவிதைகளைப் படைத்துள்ளார் (Meera, 1996). இவர்தம் அங்கத நடையை அரசியல், சமூக, சமய, தனிமனித அங்கதம் என்றாற் போல் பகுத்துக் காணலாம்.

## அரசியல் அங்கதம்

அங்கதக் கவிதை வடிவங்களுள் மீராவுக்குப் பெரிதும் ஆகி வருவது அரசியல் அங்கதமே. 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என உணர்ச்சிப் பெருக்கோடு முழங்கினர், விடுதலைக்காகப் பாடுபட்ட அன்றைய தலைவர். இன்றைய அரசியல்வாதிகளோ, சுரண்டல் எங்கள் 'பிறப்புரிமை' என முழக்கம் இடுகின்றனர். இதனை,

ஆரா வமுதன்

அமைச்சர் பதவியை

இழந்து வருந்தி

இருந்த ஓர் இரவில்

அருகில் தூங்கிய

ஆசை மனைவியைச்

சும்மா சும்மா

சுரண்டலானார்.

அம்மா கேட்டார் ஆத்திரத்தில்

ஏன்தான் உங்களுக்கு

இன்னும் அந்தப்

பொல்லாப் பழக்கம்

போகவில்லையோ"

என ஊழல் அரசில்வாதிகள் தங்கள் பதவியை இழந்தாலும் அவர்களால் அமைதியாகத் தூங்க முடிவதில்லை என்பதைச் சுட்டியுள்ளார் (Meera, 1996).

ப-பசித்திரு, த- தனித்திரு, வி- விழித்திரு இம் மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களையும் ஒன்று சேர்த்தால் வருவது 'பதவி' என்பர். ஆயின், இன்றைய அரசியல் உலகம் பதவியை நோக்கும் விதமே தனி. மீராவின் 'ஆனை' மாதிரி என்னும் கவிதையில்,

"அப்பு சாமியின் அப்பா ஆனை மாதிரி

இருந்தபோது எம்.பி. பதவி

இறந்த போது சிவலோக பதவி….

அப்புசாமியின் அப்பா ஆனை மாதிரி"

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற பழமொழி இங்கு நினைவு கூறத்தக்கது (Meera, 2003).

## சமூக அங்கதம்

அரசியல் அங்கத்திற்கு அடுத்த நிலையில் மீராவின் கவிதைகளில் சிறப்பிடம் பெறுவது சமூக அங்கதம் ஆகும். சமகாலக் காதலின் போக்கை, குறுந்தொகைப் பாடலோடு ஒப்பிட்டுட்டுள்ளார்.

"யாயும் ஞாயும் யாராகியரோ

……………………………

……………………………

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலத் தனவே"

எனக் குறுந்தொகைப் பாடல் சங்கக்காலக் காதலின் சீரினையும் சிறப்பினையும் போற்றிப் பாடுகின்றது (Mohan, 2014). ஆனால் இன்றைய காதல் மீராவின் பார்வையில் 'நவயுகக்காதல்' ஆகும். ஊர் பார்த்து, உறவு பார்த்து சாதி பார்த்து மதம் பார்த்து வருவது என்பதை,

"உனக்கும் எனக்கும்

ஒரே ஊர்? வாசுதேவ நல்லூர்

நீயும் நானும்

ஒரே மதம்? திருநெல்வேலிச்

சைவப் பிள்ளைமார் வகுப்புங்கூட ……

உன்றன் தந்தையும்? என்றன் தந்தையும்

சொந்தக்காரர்கள்? மைத்துனன் மார்கள்

எனவே? செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே"

என குறுந்தொகைப் பாடலின் இறுதி இரண்டு அடிகளை மீரா ஏளனக் குறிப்போடு நயமாகப் பயன்படுத்தியுள்ளார் (Meera, 2017). இன்றையக் காலகட்டத்தில் கல்வி என்பது வியாபாரமாகி விட்டது. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எந்நிலையில் பாடினாரோ இன்று, உறுபொருள் கொடுத்தே, கல்வியைப் பெற வேண்டிய சூழலை "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்னும் கவிதையில் கவிஞர் மீரா அங்கத உத்தியைக் கையாண்டு அம்பலப்படுத்தியுள்ளார்.

"பி.யு.சி.யா? ஒரு நூறு போதும்

பி.எஸ்.சி.பி.எட்? இருநூறு ஆகும்.

எம்.எஸ்.சி. ஆயிரம்? எம்.பி.பி. எஸ் ஏழு ஆயிரம்

இங்கே.: சேர வாரும்? செகத்தீரே”

என கல்வியின் போக்கைச் சுட்டிக் காட்டியுள்ளார் (Meera, 1996).

இன்றைய இளைய சமூகத்தினர் தீராத திரைப்பட மோகத்தால் தங்கள் வாழ்வையே இழந்து வருகின்றனர் என்பதை மீராவின் ‘பெருங்காயம்’ என்னும் கவிதை எடுத்துரைக்கிறது.

“மேக மலையில்? விமான விபத்து

மூன்று பேர்க்கு? முதுகில் காயம்

ஜெஸ்ஸீர் முனையில்? நடந்த சண்டையில்

முப்பது பேர்க்கு? முகத்தில் காயம்

சித்திரை வீதியில்? சினிமா நடிகை

ஸ்ரீஸ்ரீஸ்ரீயைத்? திக்குமுக்காடச்

செய்த கும்பலில்? சிக்கிய அறுபது பேர்க்கு

முதுகில்? முகத்தில்? நெஞ்சில் காயம்?

என விமான விபத்தில் சிக்கியவர், போர்முனையில் சண்டையிட்டவர் பெற்ற காயத்தை விட நடிகையைப் பார்க்கச் சென்றவர்கள் அதிகம் பேர் காயம் அடைந்தனர் என இளைஞர்களின் சினிமா மோகத்தை நகைச்சுவையோடு கூறியள்ளார் (Meera, 2003).

அங்கத உத்தி சிறந்து விளங்கும் மீராவின் பிறிதொரு கவிதை, ‘வறுமையை ஒழிப்போம்’ . தலைவர்கள் என்னத்தான் உரத்தக்குரலில் ஓங்கி முழங்கினாலும் வறுமை நம் நாட்டை விட்டு நீங்கிய பாடில்லை. இந்நிலையில் தலைவர் ஒருவர் வறுமையை உடனடியாக வெளியேற்றின பாங்கினைக் கூறும் போது,

“எட்டு மாதமாய்? எங்கள் தலைவர்

தெருவில் நின்று? செழிக்கச் செய்தார்

முழக்கம் ….? வறுமை

வெளியேறிற்றா விரைவாய்?

நேற்று? செட்டியார் வீட்டுத்

திருமணப் பந்தியில்? எதுவும் பேசாது

எங்கள் தலைவர்? எட்டி உதைத்தார்

வறுமை? வேகவேகமாய்? வெளியேறிற்று

பரட்டைத் தலையும்? எலும்பும் தோலும்

கிழிந்த கந்தையமாக

எனக் கவிஞரின் முடிப்பு வரிகளில் வெளிப்படும் அங்கதச் சுவை அழுத்தம் திருத்தமானது (Meera, 2017).

## சமய அங்கதம்

சமய அங்கதத்தின் ஆட்சியும் மீராவின் ஊசிகள் தொகுப்பில் உண்டு. ‘கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்பது காலங்காலமாக நாட்டில் மக்களிடையே நிகழ்ந்து வரும் ஒரு வாதம்.

‘கடவுளைத் தேடி’ என்னும் கவிதையில்?

“இருக்கிறார் கடவுள்? இல்லை கடவுள்”

வாதம் பிறந்தது? மோதல் வளர்ந்தது

இப்போது? இல்லை ஒருவர் இங்கே

இருக்கிறார் ஒருவர்? தலைமறைவாக

போத்தனூர்க் காவலர்? புலனபுய்கின்றார்

கடவுள் அவர் பாட்டிற்கு ஏதோ ஓர் இடத்தில் அமைதியாக இருக்க, ‘இருக்கிறார்’ என்றும் இல்லை என்றும் கடவுளின் பேரால் வாதம் பிறந்து, மோதல் வளர்ந்து, சண்டை சச்சரவு செய்து கொண்ட மனிதர்கள் தங்கள் வாழ்வை இழந்து தலைமறைவாக வாழ்கின்றனர் என மீரா நகைச்சுவைத் தன்மையில் வெளிப்படுத்தியுள்ளார் (Meera, 2003).

## முடிவுரை

சமுதாயக் கேடுகளை கிண்டல் செய்வது சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு அங்கதக் கவிதைகள் புதுக்கவிதை உலகில் படைக்கப்பட்டு வருகின்றன. கவிஞர் மீராவின் ஊசிகள் கவிதை சமூகச்சிக்கல்களை நகைச்சுவையோடு அலசி ஆராய்ந்துள்ளது என்பதை இக்கட்டுரை தெளிவுப்படுத்தியுள்ளது. அரசியல், சமூக, சமய, தனிமனித இழிவுகளைத் தோலுரிப்பதாக ஊசிகள் கவிதை அமைந்துள்ளது எனலாம்.

## References

Eswaran, Sa., (2007) Aaivum Thiranaivum, Paavai Publications, Chennai, India

Ilankumaranar, U.A., 2018, Tolkappiyam Thelivurai, Fourth Tamil Sangam, Madurai, India.

Meera, (1974) Oosigal, 1st Edition, Annam veliyedu, Thanjavur, India

Meera, (1996) Oosigal, 6th Edition, Annam veliyedu, Thanjavur, India

Meera, (2003) Oosigal, 7th Edition, Annam veliyedu, Thanjavur, India

Meera, (2017) Oosigal, Gowra Puthaga Maiyam, Tiruchirappalli, Tamil Nadu

Mohan, R., (2014) India ilakkiya Sirpikal, Sahitya Academy, Chennai, India

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

K. Jelin Suji & D. Mahila Jeni, Meera’s Oosigal is the Poetic Satire Pointing, Indian Journal of Multilingual Research and Development, Vol 2, Iss 4 (2021) 31-35. DOI: https://doi.org/10.54392/ijmrd2213